செய்தி வெளியீடு எண்:1027 நாள்:02.11.2021

செய்தி வெளியீடு

சென்னை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலைய வளாகத்தில் 75வது சுதந்திர தின விழா 'சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா' ஆண்டையொட்டி, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட தேசத் தலைவர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (01.11.2021) திறந்து வைத்து பார்வையிட்டார்கள். இக்கண்காட்சியில் இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட அரும்பெரும் தலைவர்களின் சிலைகள் இடம் பெற்றுள்ளன. மேலும், தேசத் தலைவர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில், தேசத் தலைவர்களின் வரலாற்றுத் தொகுப்புகளின் அரிய புகைப்படங்கள் மற்றும் அறியப்படாத தியாகிகளின் புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளது.

இக்கண்காட்சியினை இன்று (02.11.2021) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு புகைப்படக் கண்காட்சி குறித்து பாராட்டுகள் தெரிவித்தார்.

புகைப்படக் கண்காட்சி குறித்து மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தெரிவித்த கருத்துகள் "தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை 75வது இந்திய சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவின் ஓர் அங்கமாக ஏற்பாடு செய்துள்ள இக்கண்காட்சி 250 வருடங்களுக்கும் மேலான விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்களிப்பிற்கான ஒரு கையடக்கப் பதிப்பாகும். கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் அரிய புகைப்படங்கள் - எளிதில் காண இயலாத ஆவணங்கள் - அறியப்படாத ஆளுமைகள் குறித்த அற்புதத் தகவல்கள் எனப் பார்க்குமிடமெல்லாம் சிறப்பு மிளிர இக்கண்காட்சி அமையப் பெற்றுள்ளதைக் காணும் போது உள்ளம் உவகையில் துள்ளுகின்றது.

'சும்மா கிடைத்துவிடவில்லை, சுதந்திரம்' என்பதை உணர்ந்து கொள்ளும் அதே வேளையில் நமது மண்ணின் விடுதலைக்குப் போரிட்டு தங்கள் இன்னுயிர் இழந்தோருக்கும் - சிறைவாசம் ஆகி சித்திரவதை அடைந்தோருக்கும் நமது வீரவணக்கம்.

வெல்க தாய்த் திருநாடு!

இனிய பாராட்டுகள் ஏற்பாட்டாளர்கள்

அனைவருக்கும் !"

இந்நிகழ்வின்போது, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ. ப. ஜெயசீலன், இ.ஆ.ப. அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

இப்புகைப்படக் கண்காட்சி 7.11.2021 (ஞாயிற்றுக்கிழமை) வரை நடைபெறுகிறது. அனுமதி இலவசம். பொதுமக்கள் பார்வையிட்டு பயன்பெறக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9